4. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

(அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

75. தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து வணிக வரிகள்—சமய அறக்கட்டளைகள் துறையின் 5—3—1986 ஆம் நாளிட்ட 217 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

76. ராஜபாளையத்தைச் சேர்ந்த திருவாளர்கள் சென்னை சிப் போர்டு நிறுவனத்தாரால் தயாரிக்கப்படும் சிப் போர்டு களுக்கு செலுத்தக்கூடிய வரியினை குறைப்பது குறித்து வணிக வரிகள்—சமய அறக்கட்டளைகள் துறையின் 1—11—1985 ஆம் நாளிட்ட 1006 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

77. தஞ்சாவூர், சாக்கோட்டையைச் சேர்ந்த 'சேக்ரட் ஹார்ட் மறுவாழ்வு மையத்தினரால்' தயாரிக்கப்படும் பொருட் களுக்குச் செலுத்தக்கூடிய வரியினின்று விலக்களிப்பது குறித்து வணிக வரிகள்—சமய அறக்கட்டளைகள் துறையின் 7—11—1985 ஆம் நாளிட்ட 1033 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

(ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள் ஏனைய தாள்கள்.

160. கோரிக்கை எண் 3—மோட்டார் வண்டிகள் சட்டங்கள்—நிர்வாகம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1986–87 (தமிழ், ஆங்கிலம்).